செப்டம்பர் 8

**மனன வசனம்**

**அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சி கொடுக்கவேண்டும் என்றார். அப்போஸ்தலர் 23:11.**

**ஆராய்ச்சிக்கு**

*அப் 21; ரோமர் 2:28,29; கலாத்தியர் 5:6; அப் 22; அப் 23:1-30; மத்தேயு 22:23-32.*

செப் 8 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 11

# எருசலேமில் கைது



பவுல் தன் முதல் நற்செய்தி ஊழியத்தை முடித்து வந்தபிறகு, புறஜாதியாரை எவ்வாறு விசுவாசத்தி களாக ஏற்றுக்கொள்ளலாம் என்பதுபற்றி சபையில் கருத்துவேறுபாடு உண்டாகியிருந்தது. அப் 15:1-5. அந்தப் பிரச்சனை அதிகரித்துவந்ததை பவுல் உணர்ந்தி ருக்க வேண்டும்; அதனால், சபைக்குள் ஒற்றுமையை வளர்க்க பவுல் ஒரு திட்டம்போடுகிறார். தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படி ஆலோசனைச் சங்கத்தார் அவரிடம் வேண்டுகோள் வைத்தார்கள். கலா 2:10. அதனால், 'பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கும்படி' நிதியுதவி செய்யுமாறு புறஜாதி சபையாரிடம் கேட் கிறார். 1கொரி 16:1. இதனால் இரு சாராருக்கும் இடை யேயான பிளவைச் சரிசெய்யலாம் என்று நம்பினார்.

அதனால்தான், பல அபாயங்கள் இருந்தாலும், தன் மூன்றாவது நற்செய்திப் பயணத்தின் முடிவில், எரு சலேமுக்குச் செல்வதில் உறுதியாக இருந்தார். ஒரு புறம், சக யூதர்கள்மேல் அவருக்கு உண்மையான அன்பு இருந்தது. ரோமர் 9:1-5. இன்னொரு புறம், சபையில் ஒற்றுமை காணப்பட வேண்டுமென்று ஏங் கினார். கலா 3:28; 5:6. யூதரானாலும் புறஜாதியாரானா லும் விசுவாசத்தால்தான் இரட்சிக்கப்படுகிறார்கள், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் இரட்சிக்கப்படு வதில்லை. ரோமர் 3:28-30. சடங்காச்சார நிபந்தனை களை முன்வைத்து, மக்களுக்குள் பிரிவினையை உண் டாக்குவது 'நற்செய்தி எல்லாருக்கும் உரியது' என்கிற அடிப்படை உண்மைக்கே எதிரானது. எபே 2:11-22.

பவுலின் வாழ்க்கையும் ஊழியப்பணியும் புதிய தொரு காலக்கட்டத்திற்கு அடியெடுத்து வைக்கின்றன; அதுபற்றி இந்த வாரத்தில் பார்ப்போம்.

*2018, செப்டம்பர்15 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, செப்டம்பர் 9

## எருசலேம் தலைவர்களைச் சந்தித்தல்

பவுல் எருசலேமை வந்தடைந்ததும், மினாசோன் என்பவருக்கு பழக்கமான விசுவாசிகள் அவரை அன்போடு வரவேற்றார்கள்; மினாசோனுடன்தான் அவர் தங்கவிருந்தார். அப் 21:16,17.

எருசலேமில் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் வைராக்கியத்துடன் யூத விசுவாசிகள், பவுல்மேல் நல்லெண்ணத்துடன் இல்லையென யாக்கோபும் எருசலேமின் மூப்பர்களும் கவலைப்பட்டார்கள். அப் 21:18-22. அயல்நாடுகளில் மனமாறிய யூதர்கள் 'தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவும், மோசேயின் முறைமைகளின்படி நடக்கவும் வேண்டுவதில்லை' என்று பவுல் போதித்ததாக தாங்கள் கேள்விப்பட்ட செய்தியைச் சொன்னார்கள். அப் 21:21.

இது உண்மையல்ல. மாறாக, புறஜாதியாரானாலும் யூதரானாலும் இயேசுவிலுள்ள விசுவாசத்தால்தான் இரட்சிக்கப்படுகிறார்கள் என்பதால், இரட்சிப்பை பொறுத்தவரை விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை என்றுதான் பவுல் போதித்தார். ரோமர் 2:28,29; கலா 5:6; கொலோ 3:11. யூதர்கள் நியாயப்பிரமாணத்தையும் அதன் நிபந்தனைகளையும் புறக்கணிக்கும்படி இது ஊக்குவிக்க வழியே இல்லை! கீழ்ப்படிதலை கிரியைத்துவம் என்று சொல்லவேமுடியாது; ஆனால் குறைகூறுகிறவர்கள் அவ்வாறு திரித்துக்கூறுவது எளிது.

**ஓர் உண்மையுள்ள யூதனாகக் காட்டுவதற்கு பவுல் என்ன செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள்? அப் 21:23–26.**

ஊரோடு ஒத்துப்போக வேண்டுமென்று பவுலுக்கு ஆலோசனை கூறினார்கள். நசரேய பொருத்தனை செய்துகொண்ட யூதவிசுவாசிகள் சிலருக்கு ஆகிற செலவைச் செய்து, தன்னை ஒரு யூதனாகக் காட்டி, தன்னைப்பற்றிய வதந்திகள் பொய்யென அவர் நிரூபிக்கவேண்டியிருந்தது.

பவுல் அதற்கு சம்மதித்ததுதான் வருத்தகரமானது. ஆபிரகாம், மோசே, பேதுரு போன்ற பல வேதாகமப் பெரியவர்களுடைய வாழ்க்கையிலும் குறைகள் இருந்துள்ளன. யூதருக்கு யூதரைப் போலாகும்படிதான் பவுல் அவ்வாறு செயல்பட்டார் என்றும், ஏற்கனவே அப்படி ஒரு பொருத்தனை செய்திருந்தார் என்றும் சொல்லி இதை நியாயப்படுத்த முயலலாம். 1கொரி 9:19-23; அப் 18:18. பவுல் குறிப்பிடும் பிரார்த்தனை என்னவென்று தெரியவில்லை. ஆனால் பவுல் இங்கு சமரசமானார் என்பதுதான் உண்மை. எருசலேமியர் பரிந்துரைத்த கிரியைத்துவ நோக்கங்களை பவுல் ஆதரித்தார். விசுவாசத்தினால் புறஜாதியார் இரட்சிக்கப்படுகிறார்கள் என்றும், கிரியைகளால் யூதர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள் என்றும் இரண்டு சுவிசேஷங்கள் இல்லையே என்று பவுல் தாமே தீவிரமாக எதிர்த்துவந்த ஒரு விஷயத்திற்கு அவரே இங்கு இணங்குகிறார். ''அவர்கள் கேட்டபடி செய்வதற்கு தேவனிடம் பவுல் அனுமதி பெறவில்லை.' - *EGW, AA, p 405.*

சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நடந்துகொள்ள நாம் முயற்சிக்கும்போது, இதே போன்ற தவற்றை நாம் செய்யாதிருக்க என்ன செய்யலாம்?

# தேவாலயத்தில் கலகம்

சபைத்தலைவர்களின் ஆலோசனைப்படி, பொருத்தனை செய்தவர்களின் பிரார்த்தனையை நிறைவேற்ற உதவிசெய்வதற்காக ஏழுநாள் சடங்காச்சார சுத்தி கரிப்பை பவுல் செய்யவேண்டியிருந்தது. எண் 19:11-13. புறஜாதி தேசங்களி லிருந்து வருகிறவர்களை தீட்டுள்ளவர்கள் என்று எண்ணுவது யூதர்களுடைய பாரம்பரியம்; அந்நியர்களை தேவாலயத்திற்குள் அனுமதிக்கமாட்டார்கள். அதனால்தான், நசரேய விரதமிருந்த அந்த நபர்களுக்கான செலவை தான் ஏற்றுக்கொள்வதாக பிரதான ஆசாரியனிடம் தெரிவிப்பதற்குமுன்னராக பவுல் தன்னைச் சுத்திகரிக்க வேண்டியிருந்தது. அப் 21:26.

**ஏழு நாள் சுத்திகரிப்பை முடிக்கிறபோது பவுலுக்கு என்ன நிகழ்ந்தது? அப் 21:27–36.**

யூதமதத்தின் மிகப் புனிதனமான சடங்குகளை அவமதித்து, அதன்மூலம் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தியதாக பவுல்மேல் குற்றஞ்சுமத்தி, மக்களைத் தூண்டிவிட்ட சிலர், கலகத்தை உண்டுபண்ணினார்கள். எபேசுவைச் சேர்ந்த துரோப்பீமு என்பவர் ஒரு புறஜாதியான்; விசுவாசியான அவர் பவுலோடு எருசலேமுக்கு வந்திருந்தார். அப் 21:29. எனவே, யூதர்கள் மட்டும் செல்லக்கூடிய தேவாலயத்தின் உட்பிராகாரத்திற்குள் பவுல் அவரை அழைத்துச்சென்றதாக நினைத்தார்கள். அந்தக் குற்றச்சாட்டு சட்டப்படி நிரூபிக்கப்பட்டால், பவுலுக்கு அதிகப்பட்சதண்டனைகிடைக்கும். வெளிப்பிராகாரத்திற்கும் உட்பிராகாரத்திற்கும் நடுவே நின்ற சுவரில், புறஜாதியார் உள்ளே செல்ல அனுமதியில்லை என்றும், மீறிச்செல்பவர் மரணதண்டனைக்கு ஆளாவார் என்றும் கிரேக்க மொழியிலும், லத்தீன் மொழியிலும் எழுதப்பட்ட அறிவிப்புகள் இருந்தன.

‘விருத்தசேதனம் பண்ணப்படாத ஒருவர் உட்பிராகாரங்களிலிருந்த புனிதஸ்தலத்திற்குள் பிரவேசிப்பது மரணதண்டனைக்கு ஏதுவான குற்றமென்று யூதச் சட்டம் கூறியது. எபேசியனாகிய துரோப்பீமுவை நகரத்தில் பவுலோடு சேர்த்து மக்கள் பார்த்திருந்தார்கள்; பவுல் அவரை தேவாலயத்திற்குள் அழைத்துச் சென்றிருப்பாரென நினைத்தார்கள். ஆனால், அவர் அழைத்துச்செல்லவில்லை; பவுல் ஒரு யூதன்; அவர் தேவாலயத்திற்குள் சென்றதில் சட்டமீறல் எதுவுமில்லை. அவர்மீதான குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யாக இருந்தபோதிலும், பொதுவாக நிலவிவந்த தப்பெண்ணத்தை மேலும் கிளப்பிவிட்டது. தேவாலயப் பிராகாரங்களில் நின்றவர்களும் அவ்வாறு கூச்சலிட ஆரம்பித்ததுமே, அங்கு கூடினவர்கள் வெறிபிடித்தவர்கள் போலக் கத்தினார்கள்.’ - *AA, p 407.*

கலகம் உண்டானதாக ரோம சேனாதிபதியாகி கிலவுதியு லீசியாவுக்கு செய்தி எட்டுகிறது; அவன் தன் போர்ச்சேவகர்களுடன் வந்து, அந்தக் கும்பல் பவுலைக் கொன்றுவிடாமல் காப்பாற்றுகிறான். தாக்குதலுக்கு ஆளாகியிருந்த பவுலைக் கைதுசெய்து, சங்கிலிகளால் கட்டு கிறான்; எதனால் கலகம் உண்டானதென்று விசாரிக்கிறான்; ஆனால், கும்பலின் கூச்சல் அதிகமாக இருந்ததால், அப்போஸ்தலனைக் கோட்டைக்குக் கொண்டு செல்லக் கட்டளையிடுகிறான்.

பொய்யான வதந்திகளால் கலகம் உண்டானது. நாம் கேட்கிற அல்லது பரவுகிற வதந்திகள் குறித்து நாம் எவ்வளவுக்கு எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்?

## செவ்வாய், செப்டம்பர் 11

# கும்பலுக்கு முன்பாக

தொடர்ந்து என்ன நிகழ்ந்தது என்பதை அப் 21:37-40 வசனங்கள் கூறுகின்றன. பவுலை விசாரிப்பதற்காக கோட்டைக்குள் தூக்கிச் சென்றார்கள். பவுலைக் கொலைசெய்யும்படி கூடியிருந்த கும்பல் கூச்சலிட்டது. அப்போது மக்களிடம் பேச தன்னை அனுமதிக்கும்படி சேனாதிபதியிடம் பவுல் அனுமதி கேட்டார்.

சேனாதிபதியிடம் கிரேக்கப் பாஷையில் பவுல் பேசினபடியால், பவுல் ஓர் எகிப்திய யூதன் என்று சேனாதிபதி எண்ணுகிறான். அந்த யூதன் சுமார் மூன்று வருடங்களுக்குமுன் ரோம ஆக்கிரமிப்புக்கு எதிராக ரோமில் கலகத்தைத் தூண்டிவிட்டவன். ஆனால், ரோமப்படைகள் அந்தக் கலகத்தை அடக்கின; அவனுடைய ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டார்கள்; பலர் கைது செய்யப்பட்டார்கள்; ஆனால் அந்த எகிப்தியன் தப்பிவிட்டான்.

தான் எகிப்தைச் சேர்ந்தவன் அல்ல, தர்சு பட்டணத்தைச் சேர்ந்தவன் என்று சொன்னதுமே, பவுலைப் பேச அவன் அனுமதிக்கிறான். பேச ஆரம்பித்த பவுல், தனக்கு எதிராகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கு விரிவான பதில் எதுவும் கொடுக்கவில்லை. அப் 21:28. மாறாக, தான் மனமாறினதையும், இயேசுவின் சீடர்களை உபத்திரவப்படுத்தும் அளவிற்கு யூதமார்க்கத்தில் தீவிரமாக இருந்ததையும் கூறுகிறார். ஆண்டவர் தனக்கு வெளிப்பாடுகளைக் கொடுத்ததின் நிமித்தம், அவற்றிற்குக் கீழ்ப்படியத் தீர்மானித்ததாகக் கூறினார். தன் வாழ்க்கை முற்றிலும் மாறினதையும், புறஜாதியாருக்குப் பிரசங்கிக்க, தான் அழைக்கப்பட்டதையும் விளக்கினார். அவர்களிடம் வேத வியாக்கியானம் பண்ணாமல், ஒவ்வொரு சூழ்நிலையிலும் தான் நடந்துகொண்ட விதத்தை தன்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து கூறினார்.

**புறஜாதியாருக்கான அப்போஸ்தலனாக தன்னை ஏற்படுத்தினார் என்று சொன்னதுமே கூடியிருந்தவர்கள் எவ்வாறு நடந்துகொண்டார்கள்? அப் 22:22–29.**

பவுலைப் பேசும்படி அனுமதித்தும் பயனில்லாமல் போனது. புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் தன்னைத் தெரிந்துகொண்டாரென பவுல் கூறியது, அவருக்கு எதிரான குற்றச்சாட்டு உண்மையென நிரூபணமாவது போல இருந் தது. அப் 21:28. மீண்டும் கும்பலின் ஆராவாரம் அதிகரித்தது.

பவுல் சொன்னதெல்லாம் அந்த ரோம சேனாதிபதிக்குப் புரிந்திருக்காது; எனவே, பவுலை வாரினால் அடித்து விசாரிக்கத் தீர்மானித்தான். பவுல் கலப்பினமற்ற ஒரு யூதன். பிலி 3:5. ஆனால் ரோமக்குடியுரிமையையும் பெற்றிருந்தார். அதைச் சொன்னதுமே சேனாதிபதி பயந்துவிட்டான். ஒரு ரோமக் குடிமகனை அவ்வாறு உபத்திரவப்படுத்துவது சட்டப்படி குற்றம்.

அப் **22:1–21**இல் பவுல் செய்த பிரசங்கத்தை வாசியுங்கள். தன் பக்கத்திலிருந்த நியாயத்தை எடுத்துச் சொன்ன அதே வேளையில் தன் சகயூதர்களுக்கு போதனையாகவும் அதை எவ்வாறு கூறினார்? தான் மனமாறின சம்பவத்தை ஏன் கூறுகிறார்? மனமாற்ற சம்பவங்கள் எவ்வாறு வல்லமைமிக்க சாட்சிகளாக விளங்குகின்றன?

## சனகெரிம் சங்கத்திற்குமுன்பாக

பவுலால் ரோம சாம்ராஜ்யத்திற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்பதை ரோம சேனாதிபதி புரிந்துகொண்டான்; அதாவது, அது யூதர்களுக்குள் ஏற்பட்ட உட்பூசல் என்று அறிந்ததும், சனகெரிம் சங்கத்தார் அந்த வழக்கை விசாரிக்கும்படிக் கூறுகிறான். அப் 22:30; 23:29.

**சனகெரிம் சங்கத்திற்குமுன்பாக பவுல் எவ்வாறு பேச்சை ஆரம்பித்தார்? அப் 23:1-5.**

பவுல் தன் பேச்சை ஆரம்பித்ததும், அவருடைய வாயில் ஓர் அடி விழுகிறது; ஒரு சிறைக்கைதியாக நின்றுகொண்டு தேவனுடைய பெயரைக் குறிப்பிட்டதை தேவதூஷணமென அவர்கள் கருதியிருக்கலாம். அதற்கு பவுல் சொன்ன பதிலானது அவருடைய மனோநிலையைப் புரிந்துகொள்ள உதவுகிறது. பிரதான ஆசாரியனைப் பார்த்து 'வெள்ளையடிக்கப்பட்ட சுவரே' என்கிறார். அப் 23:3. பரிசேயர்களின் மாய்மாலம் குறித்து இயேசு எச்சரித்ததை அவருடைய வார்த்தைகள் பிரதிபலிக்கின்றன. மத் 23:27. தான் அவ்வாறு திட்டினது பிரதான ஆசாரியனை என்பது உண்மையில் பவுலுக்குத் தெரியாது. அவருக்கு கண்பார்வையில் குறைபாடு இருந்ததும், அதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

**விசாரணையைத் தடைசெய்ய பவுல் எவ்வாறு சாமர்த்தியமாகச் செயல்பட்டார்? அப் 23:6-10.**

சனகெரிம் சங்கத்தில் பரிசேயரும் இருந்தார்கள்; சதுசேயரும் இருந்தார்கள். உபதேசம் உட்பட பல விஷயங்களில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு இருந்தது. உதாரணமாக சதுசேயர்களின் வேதாகம ஏட்டில் மோசே எழுதின முதல் ஐந்து புத்தகங்கள்தாம் இடம்பெற்றிருந்தன; மரித்தோரின் உயிர்த்தெழுதலை அவர்கள் நம்பவில்லை. மத் 22:23-32.

சனகெரிம் சங்கத்தாருடைய கவனத்தை சாமர்த்தியமாகத் திசைதிருப்புவதற்காக மட்டும் பவுல் அவ்வாறு கூறவில்லை. அப் 23:6. தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் உயிர்த்தெழுந்த இயேசுவைச் சந்தித்ததுதான் அவரை மனமாறச் செய்தது; அப்போஸ்தல ஊழியம்செய்யத் தூண்டியது. உயிர்த்தெழுதலை அவர் நம்பியதற்காகத்தான் உண்மையில் அவர் விசாரிக்கப்பட்டார். அப் 24:20,21; 26:6-8. முன்பிருந்த வைராக்கியத்தைவிட்டு அவர் மாறியதற்கு வேறெந்த காரணத்தையும் சொல்லமுடியாது. இயேசு மரித்தோரிலிருந்து எழுந்திருக்காவிட்டால், அவருடைய ஊழியம் அர்த்தமுள்ளதாக இருந்திருக்காது; அவரும் அதை அறிந்திருந்தார். 1கொரி 15:14-17.

அன்று இரவில், பவுல் இருந்த கோட்டைக்குள் தேவன் தரிசனமாகி, ''பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமில் சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும்'' அவரை ஊக்கப்படுத்தினார். அப் 23:11. அத்தகைய சூழ்நிலைகளில் ஆண்டவருடைய வார்த்தைகள் பவுலுக்கு எத்துணை ஆறுதலாக இருந்திருக்கும்! ரோமில் பிரசங்கிக்க வேண்டும் என்பது அவரைட நீண்ட நாள் ஆசை. அப் 19:21; ரோமர் 1:13-15; 15:22-29. அதற்கான நேரம் நெருங்கியிருந்தது.

## செசரியா பட்டணத்திற்கு அனுப்பிவிடுதல்

சட்ட வழிமுறைகளின்படி பவுலை ஒழித்துக்கட்ட முடியாததை அறிந்து வெறுத்துப்போன யூதர்கள் சிலர், அவரை இரகசியமாகக் கொலைசெய்ய ஒரு திட்டம் போட்டார்கள்.

**அவர்கள் போட்ட திட்டம் என்ன? அது எவ்வாறு தகர்ந்தது? அப் 23:12–17. தவறான நோக்கங்களுக்காகவும் வைராக்கியம்காட்ட வாய்ப்புள்ளது என்பது இதிலிருந்து எவ்வாறு தெரிகிறது?**

நாற்பதுக்கும் மேற்பட்ட யூதர்கள் பவுலுக்கு விரோதமாகச் சதிசெய்து, அவரைக் கொலைசெய்வதாகக் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டார்கள்; பவுல் எருசலேமில் எவ்வளவுக்கு வெறுப்பைச் சம்பாதித்திருந்தார் எனபது புரிகிறது. அவ்வாறு சபதமெடுத்தவர்கள் யாரென்று லூக்கா சொல்லவில்லை; துரோகிகள், எதிரிகள் என தாங்கள் கருதியவர்களிடமிருந்து யூத விசுவாசத்தைக் காப்பாற்ற எதையும் செய்ய ஆயத்தமாக இருந்த தீவிரவாதிகள். இந்த அளவுக்கு மதவெறி யும் கலகக்குணமும் தேசியவெறியும் முதல் நூற்றாண்டில் யூதேயாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அதிகம் இருந்தன.

சதித்திட்டம் குறித்து பவுலின் உறவினன் கேள்விப்படும்படி தேவன் உதவி னார். பவுலின் குடும்பம்பற்றி அதிக விபரம் தெரியவில்லை; ஆனால், அவரும் அவருடைய சகோதரியும் எருசலேமில் வளர்ந்திருக்கலாம். அப் 22:3. அங்கே அவருடைய சகோதரிக்கு திருமணமாகி, குறைந்தபட்சம் ஒரு மகனாவது இருந் திருக்கிறான் என்பது தெரிகிறது. அப் 23:18,22 வசனங்களிலுள்ள நெயனிஸ்காஸ் என்கிற கிரேக்க வார்த்தையும், அவனுடைய ‘கையைப் பிடித்து’ அழைத்துச் செல் வதாக அப் 23:19இல் சொல்லப்படுவதும், பவுலுடைய சகோதரியின் மகன் ஒரு பதின்பருவ வாலிபன் என்பதை உறுதிப்படுத்துகிறது. அவன் கோட்டைக்குள் சென்று, நடந்ததை பவுலுக்குத் தெரிவிக்கிறான்.

**சேனாதிபதியாகிய லீசியா, தேசாதிபதியான பெலிக்ஸுக்கு பவுலைப்பற்றி எழுதி அனுப்பிய செய்தி என்ன? அப் 23:26–30.**

சூழ்நிலையைத் தெளிவாக விளக்கி பெலிக்ஸுக்கு நிருபம் எழுதியிருந் தான். மேலும், பவுலின் ரோமக் குடியுரிமை எவ்வளவு பயனளித்தது என்பதும் தெரிகிறது. ரோமச் சட்டப்படி, ரோமக் குடிமக்களுக்கு முழுப்பாதுகாப்பு இருந் தது. உதாரணமாக, சட்டப்படி விசாரிக்கப்படும் உரிமை இருந்தது; அவர்கள் நீதிமன்றம் சென்று தங்கள் நியாயத்தைக் கூறலாம். அப் 25:16. விசாரணையில் திருப்தியில்லாவிட்டால் பேரரசனுக்கு அபயமிடலாம். அப் 25:10,11.

பெலிக்ஸ் எப்படிப்பட்டவனாகவும் இருக்கட்டும்; ஆனால் பவுலை சட் டத்திற்கு உட்பட்டு நடத்தினான். ஆரம்பக்கட்ட விசாரணையை முடித்தபிறகு, குற்றஞ்சாட்டினவர்கள் வரும்வரை அவரைக் காவலில் வைக்கச்சொன்னான்.

பவுலுடைய வாழ்க்கையில் தேவ வழிநடத்துதலைக் கவனியுங்கள். உங்களுடைய வாழ்க்கையில் எவ்வளவுதான் சோதனைகளும் பாடுகளும் உண்டானாலும், தேவனுடைய வழிநடத்துதலை தாழ்மையோடு எண்ணிப்பார்த்து வியந்திருக்கிறீர்களா?

## வெள்ளி, செப்டம்பர் 14

## மேலும் படிக்க:

'எருசலேமில் யூதச் சகோதரர்கள் மத்தியிலிருந்த ஏழைகளைத் தாங்குகிற ஊழியம் நடைபெறும்படி, புறஜாதி சபையார் கொடுத்தனுப்பியிருந்த தர்மப் பணத்தை பவுலும் அவரோடு இருந்தவர்களும் முறைப்படி தலைவர்களிடம் அளித்தார்கள்.

'உலகெங்கும் ஒழுங்கமைக்கப்பட்ட தேவ பணிக்காக புறஜாதியார் உண்மையோடு கொடுத்ததை அந்த உற்சாக பலிகள் சுட்டிக்காட்டின. அவற்றை நன்றியோடு அவர்கள் பெற்றிருக்கவேண்டும். ஆனால், யாருக்குமுன்பாக பவுலும் அவரோடு இருந்தவர்களும் நின்றிருந்தார்களோ, அவர்களில் சிலர் சகோதரசிநேகத்தோடு கொடுக்கப்பட்ட அந்த காணிக்கைகளை பெருந்தன்மையோடு பெறவில்லை என்பதைப் பவலும் நண்பர்களும் புரிந்துகொண்டார்கள்.' – *EGW, AA, pp 399,400.*

'சபைத்தலைவர்கள் அந்த அப்போஸ்தலனுக்கு எதிரான கசப்புணர்வை முற்றிலும் அகற்றிவிட்டு, புறஜாதியாருக்கு நற்செய்தியை அறிவிப்பதற்கென்றே தேவன் அவரை அழைத்திருந்ததை நம்பியிருந்தால், அந்த விசாரணை நடைபெற தேவன் அனுமதித்திருக்க மாட்டார். பவுலின் ஊழியமுயற்சிகள் உடனடியாக முடிவடைவது தேவ சித்தமல்ல. ஆனால், எருசலேம் சபைத்தலைவர்களின் போக்கால் உருவான தொடர் சூழ்நிலைகளைத் தடுப்பதற்கு அற்புதம் எதையும் தேவன் செய்யவில்லை.

' இன்றும் இதே மனநிலை இதே விளைவுகளைத்தான் ஏற்படுத்துகிறது. தேவ கிருபையைப் போற்றுவதையும், அவருடைய வழிநடத்துதலின்படி நடப்பதையும் புறக்கணிக்கும்போது, பல ஆசீர்வாதங்களை சபை இழக்கிறது. உண்மையுள்ள ஒரு ஊழியனின் பிரயாசங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், அவர் ஊழியக்காலத்தை மேலும் தேவன் அதிகரித்திருப்பாரல்லவா! கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனின் வார்த்தைகளையும் செயல்களையும் தவறாகப் புரிந்து, புரட்டும்படி புத்தியை மழுங்கடிக்க சத்துருவை சபை அனுமதித்தால், தாம் கொடுத்த ஆசீர்வாதத்தை சிலசமயங்களில் தேவன் எடுத்துவிடுவார்.

'எச்சரிப்பின் சத்தத்தையும் ஊக்கமளிக்கும் செய்தியையும் அடக்கிவிட்டு, துடிப்பற்ற நெஞ்சின்மேல் கைகட்டி நின்றுவிட்டால், அதன்பிறகுதான் தாங்கள் புறக்கணித்த ஆசீர்வாதங்களின் மதிப்பைக் காணும்படி கல்நெஞ்சுக்காரர்கள் விழித்துக் கொள்வார்கள். அவர்கள் வாழ்ந்து சாதிக்கமுடியாததை அவர்களுடைய மரணம் சாதிக்கக்கூடும்.' – *EGW, AA, pp* 417, 418.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *எருசலேமில் தனக்கு வரவேற்பு கிடைக்காது என்று அறிந்திருந்தாலும், தன் நலனை விட சபையின் நலனை பவுல் பெரிதாக நினைத்தார். அவருடைய முன்மாதிரியை எந்த அளவுக்கு நாம் பின்பற்றலாம்?*

2. *எருசலேமில் பவுல் சமரசமான சம்பவத்தில் நமக்குள்ள பாடம் என்ன? நாம் வாழ வேண்டிய கொள்கைகளில் சமரசமாகாமல் எவ்வாறு மற்றவர்களோடு ஒத்து வாழ முடியும்? அவ்வாறு வாழ்வது சாத்தியமா?*

3. *சபை ஒற்றுமைதான் மிகமுக்கியமானது. நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், ஆனாலும், ஒற்றுமையோடு சேர்ந்து வாழ, நாம் என்ன செய்யலாம்?*